முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஜமதக்னி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

11.04.2019, வியாழக்கிழமை

1. **பரமானந்த சதாசிவ குருவே**
**பரோபகாரம் வளர்க்கும் குருவே**
**தரணி காக்க சக்தியாக வந்த**
**தவசியே ஆறுமுக அரங்கனே**

2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் நித்ய பிரசன்ன ஆசியை
வரங்களென **விளம்பி சேல் திங்கள்**
**வளமுற எழுநான்கு திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 28ம் நாள் 11.04.2019, வியாழக்கிழமை)**

3. வாரமதில் ஜமதக்னி யானும்
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
பாரதமே அரங்கன் காட்டும்
பரோபகார தானதரும வழியை

4. தரும வழியை வணங்கி ஏற்க
தட்டாது பின்பற்றி வருக
கருமவினை உலகில் சேரா
கண்டுரைப்பேன் ஞானவழிகள் தேறி

5. தேறியே கலியுகம் தன்னில்
திருவருளாக அரங்கன் குருவருள்
பெருந்துணையாக பாதுகாப்பு தரும்
பேதமற அரங்கன் சீடர்கள்

6. சீடர்கள் வழி உயர் சேவையாக
செப்பிட தருமபலம் பெருகி
இடர்கள் என்பதே இல்லாத
இயம்பிடுவேன் அமைதி வளமும்

7. வளமான இயற்கை பலமும்
வல்லமையும் கூடி உலகமே
பலம் பெறும் ஞானயுகமாக
பாலதண்டாயுதன் அருளால் சிறப்புறும்

8. சிறப்பறிவும் சிந்தை தெளிவும்
சேவைமிக்க வழிகள் தன்னை
மறுப்பில்லா மக்கள் ஏற்று
மகான் அரங்கனே உயர் குருவென

9. குருவென தெளிவு கண்டு நடக்க
குவலயமே தன் நிலை உயரும்
திருவருள்பட மக்களின் வாழ்வும்
திடமும் திறமும் காண்கும்

10. காண்கவே கலிவாழ் மக்களே
கருணைமிக்க ஞானநெறி
உண்மை ஆன்மீக வழியை
உயர்வாக ஏற்றுத் தொடர

11. தொடர கலிவாழ் மக்களுக்கு
தேக்கமிலா முன்னேற்றமும்
தடையில்லா ஞானபலமும் கிட்டும்
தாமுரைத்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் ஜமதக்னி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

பரமானந்தம் நிலையில் என்றும் நிலைத்திருக்கும் பரமானந்த சதாசிவ சற்குருவே உலகினில் மனிதநேயத்தை ஜீவதயவை பரோபகார நிலையை வளர்த்து மக்களை நன்னெறி வழி செலுத்தி, கலியுகத்தினின் துன்பத்தில் இருந்து மீட்கும் சற்குருவே இவ்வுலகை காக்கவே எல்லையில்லா ஆற்றலுடன் மகா சக்தி வடிவமாக முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட அவதார ஞானியே மகா தவசியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதங்கள் மிகுந்த உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 28ம் நாள் 11.04.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே ஜமதக்னி முனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஜமதக்னிமுனிவர்.

பாரத தேசத்தினில் உள்ள மக்களெல்லாம் தயவே வடிவான பரோபகாரம் மிக்க தருமத்தின் வழியை அரங்கன் காட்டுகின்ற உண்மை ஆன்மீக தரும வழியை தவறாமல் பின்பற்றி நடந்திட உலக மக்களிடையே கர்மவினைகள் மேலும் சேராமல் முன் ஜென்ம பாவங்களும் நீங்கி ஞான மார்க்கத்தில் கடைத்தேறிடுவர். அவர்களுக்கு உத்தம மகா ஞானி அரங்கனின் குருவருளும், ஞானிகளின், தெய்வங்களின் திருவருளும் கிடைத்து அரங்கனின் குருவருள் எக்காலத்தும் எப்போதும் அவர்களை விட்டு நீங்காமல் பாதுகாப்பாய் பெருந்துணையாக வந்திடும்.

அரங்கனின் பேதாபேதமற்ற உத்தம சீடர்கள் மூலமாக உலகமெங்கும் அரங்கனின் தருமநெறி பரவி உலகினில் தருமபலம் பெருகி துன்பங்கள் ஏதும் இல்லாத அமைதியான வளமான இயற்கை பலமும் வல்லமையும் கூடிய உலகம் உருவாகி உலகமே நல்லுலகமாக மாறி பயன்பெறும், அருள்பலமும் பெறும். இந்த உலகமே அரங்கன் அருளால் ஞானயுகமாக மாறி முருகப்பெருமானின் அருளால் சிறப்படையும்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற பரோபகாரம்மிக்க தயவு நெறியை, சிறப்பறிவுமிக்க நெறியை, தானதரும வழியை சிந்தையை தெளிவடைய வைக்கும் நெறியை, தன்னலம் அற்ற தொண்டினை பிரதானமாக கொண்ட தொண்டு நெறியை மறுப்புகள் ஏதும் இல்லாமல் முழுமனதாய் ஏற்றுக் கொண்டு வாழ்வினில் கடைப்பிடித்து வருவதுடன் யுகமாற்ற மகா ஞானி அரங்கனே இவ்வுலகின் ஒப்பற்ற ஞானசற்குரு என்பதையும் உணர்ந்து அரங்கமகா தேசிகனாரை குலகுருவாய் ஏற்று தெளிவுடன் அரங்கனை பின்தொடர்ந்து அரங்கரின் உபதேசங்களை ஏற்று பின்தொடர்ந்திட வேண்டும்.

அரங்கனை ஏற்று அரங்கனை உலகோர் பின்பற்றி நடந்திட இந்த உலகமே ஞானிகளின் அருளாசிகளைப் பெற்று உயர்வான நிலையை அடைந்திடும். தெய்வங்களின் திருவருளையும் மக்களெல்லாம் பெற்று மக்களது வாழ்வு உறுதிமிக்க வாழ்வாக திறமைமிக்க உயர்வான வாழ்வாக மாறிடும்.

கலியுக மக்களே உங்கள் துன்பங்களிலிருந்து மீண்டு நன்மை பெற, அரங்கனின் எளிய ஞானவழிகளை தவறாது பின்பற்றுங்கள். உலகோர் அரங்கனின் தூய ஞானநெறிகளை கருணைமிக்க தயவு நெறிகளை உளமார ஏற்று பின்தொடர்ந்திட உண்மை ஆன்மீக வழியை ஏற்று பின்தொடர கலியுகத்தில் வாழ்ந்த போதும், தடைகள் ஏதும் இன்றி முன்னேற்றமான வாழ்வை வாழலாம். ஞானபலமும் அரங்கன் அருளால் ஞானிகள் அருளால் தடையின்றி கிடைத்திடும் என கூறுகிறார் மகான் ஜமதக்னி முனிவர்.

–சுபம்–